## நவம்பர் – 12 – திங்கள்

புனித யோசபாத்

**மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை: திபா. 24:1**

### முதல் வாசகம் : தீத்து 1 : 1 – 9

அனைவருக்கும் பொதுவான விசுவாச அடிப்படையில் என் உண்மைப் பிள்ளை தீத்துக்கு, கடவுளின் பணியாளனும் இயேசு கிறிஸ்துவின் திருத்தூதனுமாகிய பவுல் எழுதுவது. தந்தையாம் கடவுளிடமிருந்தும் நம் மீட்பராம் கிறிஸ்து இயேசுவிடமிருந்தும் நம்பிக்கை கொள்ளவும் நிலைவாழ்வை எதிர்நோக்கி இறைப்பற்றுக்கு இசைந்த உண்மை அறிவைப் பெறவும் நான் திருத்தூதனாய் இருக்கிறேன். இந்நிலை வாழ்வை, பொய் கூறாத கடவுள், காலங்கள் தொடங்கு முன்னே வாக்களித்தார்.ஏற்ற காலத்தில் நற்செய்தியைப் பறைசாற்றியதன் வாயிலாகத் தம் செய்தியை வெளிப்படுத்தினார். இந்நற்செய்தியைப் பறைசாற்றும் பணி நம் மீட்பராம் கடவுள் இட்ட கட்டளைப்படி என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.நான் உனக்குப் பணித்தபடியே கிரேத்துத் தீவில் நீ மேலும் செய்யவேண்டியவற்றை ஒழுங்குசெய்து, நகர்தோறும் மூப்பர்களை ஏற்படுத்த உன்னை அங்கே விட்டு வந்தேன்.இம்மூப்பர்கள் குறைச்சொல்லுக்கு ஆளாகாதவராயும் ஒரு மனைவியைக் கொண்டவராயும் நம்பிக்கை கொண்ட பிள்ளைகளை உடையவராயும் இருக்கவேண்டும். தாறுமாறாக வாழ்பவர்கள் எனக்குற்றம் சுமத்தப்பட்டவர்களாகவோ கட்டுக் கடங்காதவர்களாகவோ இருக்கக் கூடாது.ஏனெனில் சபைக் கண்காணிப்பாளர்கள் கடவுள் பணியில் பொறுப்பாளர்களாய் இருப்பதால், அவர்கள் குறைச்சொல்லுக்கு ஆளாகாதிருக்க வேண்டும். அகந்தை, முன் கோபம், குடிவெறி, வன்முறை, இழிவான ஊதியத்தின்மேல் ஆசை ஆகியவை இவர்களிடம் இருக்கக்கூடாது.மாறாக, அவர்கள் விருந்தோம்பல், நன்மையில் நாட்டம், கட்டுப்பாடு, நேர்மை, அர்ப்பணம், தன்னடக்கம் ஆகியவற்றைக் கொண்டிருக்கவேண்டும். அவர்கள் தங்களுக்குக் கற்பிக்கப்பட்ட உண்மைச் செய்தியைப் பற்றிக் கொண்டிருக்க வேண்டும். அப்பொழுது அவர்கள் நலந்தரும் போதனையை அறிவுறுத்தவும் எதிர்த்துப் பேசுவோரின் தவற்றை எடுத்துக் காட்டவும் வல்லவர்களாய் இருப்பார்கள்.

**பதில்பாடல் :** கடவுளின் முகத்தைத் தேடும் தலைமுறையினர் இவர்களே.

### நற்செய்தி : லூக்கா 17 : 1 - 6

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: ”பாவத்தில் விழுவதைத் தவிர்க்க முடியாது. ஆனால் ஐயோ! அதற்குக் காரணமாய் இருப்பவருக்குக் கேடு!அவர் இச்சிறியோருள் எவரையாவது பாவத்தில் விழச்செய்வதைவிட அவ்வாறு செய்பவரது கழுத்தில் ஒரு எந்திரக் கல்லைக்கட்டி அவரைக் கடலில் தள்ளிவிடுவது அவருக்கு நல்லது.எனவே, நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள். உங்களுடைய சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் பாவம் செய்தால் அவரைக் கடிந்துகொள்ளுங்கள். அவர் மனம் மாறினால் அவரை மன்னியுங்கள். ஒரே நாளில் அவர் ஏழு முறை உங்களுக்கு எதிராகப் பாவம் செய்து ஏழு முறையும் உங்களிடம் திரும்பி வந்து, ”நான் மனம் மாறிவிட்டேன்” என்று சொல்வாரானால் அவரை மன்னித்து விடுங்கள். ”திருத்தூதர்கள் ஆண்டவரிடம், ”எங்கள் நம்பிக்கையை மிகுதியாக்கும்” என்று கேட்டார்கள்.அதற்கு ஆண்டவர் கூறியது: ”கடுகளவு நம்பிக்கை உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்தக் காட்டு அத்தி மரத்தை நோக்கி, ”நீ வேரோடே பெயர்ந்துபோய்க் கடலில் வேரூயன்றி நில்” எனக் கூறினால் அது உங்களுக்குக் கீழ்ப்படியும்“ என்றார்.

**தியானம்:** இறைமகன் இயேசு எம்மைப் பாவத்திலிருந்து மீட்டெடுக்க சிலுவைச்சாவை ஏற்கும் அளவிற்கு தன்னைத் தாழ்தியவராக எமக்காக பலியானார். தான் எவ்வாறு எங்கள் பாவங்களை மன்னித்தாரோ அதே போன்று நாங்களும் ஒருவரை ஒருவர் மன்னித்து வாழ வேண்டுமென்று விரும்புகிறார். எனவேதான் இன்றைய வாசகத்தில் ஒருவர் தான் செய்த பிழையை உணர்ந்து மன்னிப்பு கேட்டால் ஒரு முறை அல்ல ஏழு முறை கேட்டால் ஏழு முறையும் மன்னிக்கும்படி கூறுகின்றார். இம் மன்னிப்பு என்பது எந்தளவிற்கு காணப்படுகின்றது என்று சிந்தித்துப் பார்ப்போம். நாம் ஒரு முறை என்பதே நடைபெற முடியாத காரியம். அதிலும் ஏழு முறை என்றால் சாத்தியப்படுமா என்பது கேள்விக்குறியே. ஏனென்றால் அவர் செய்வதெல்லாம் செய்துவிட்டு மீண்டும் வந்து மன்னிப்புக் கேட்டால் அவரை மன்னிப்பதற்கு எனக்கு வேற வேலையில்லையா என்று மன்னிக்க மறுத்து விடுகின்றோம். ஆனால் நாங்கள் மற்றவர்களை மன்னித்து அன்புடன் ஏற்று வாழும் பொழுது இறைவனை அன்பு செய்கின்றோம், அவரும் எங்களை அன்பு செய்கிறார் என்பதை மறந்து வாழ்கின்றோம். அன்பு பொறுமையுள்ளது, பரிவுள்ளது, தன்னலத்தை நாடாது, இறுமாப்பு அடையாது. சீற்றத்துக்கு இடம் தராது…… இவ்வாறாக இறைவார்தையில் பார்க்கின்றோம். எனவே இவ்வாறான நற்பண்புகள் முதலில் எமது குடும்பத்தில், அயலவர்களின் மத்தியில், பங்கு மக்கள் மத்தியில் பகிரப்படும் பொழுது எங்கும் அன்பும் சமாதானமும், ஒற்றுமையும் நிலவும். எனவே நாங்கள் இவ்வாறு ஒன்றுபட்டு வாழ எங்களைத் தயார்படுத்தவோம்.